2015 செப்டம்பர் 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-25

(ஆ) ஒரத்தநாடு, விராலிமலை, சாத்தூர், ஆலத்தூர் மற்றும் திண்டிவனத்தில் விடுதியுடன்கூடிய தொழிற்பயிற்சி மையங்கள் தொடங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, தமிழகம் வீறுபெற்று உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டுமாயின், தொழில் திறன் அவசியம் என்பதால், அதனை நிறைவேற்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை கடந்த நான்கு ஆண்டுகளில் எனது தலைமையிலான அரசு எடுத்திருக்கிறது.

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை, எளிய குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் நலனுக்காகவும், தொழிற்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொழிற் பயிற்சி நிலையங்கள்—Industrial Training Institutes அரசால் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தற்போது 77 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்கள்மூலம் 45 பொறியியல் மற்றும் 20 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் 28,259 மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் 3,000 மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறும்வகையில், விடுதி வசதியுடன்கூடிய 15 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்கிட நான் உத்தரவிட்டேன். அதன்படி 15 தொழிற்பயிற்சி நிலையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியான இந்திய தொழில் வர்த்தகக் கூட்டமைப்பால், அதாவது ASSOCHAM ஆல், தொழில் வளர்ச்சி குறித்து மேற்கொள்ளப்பட்ட மாநிலங்களுக்கு இடையேயான ஒப்புநோக்கு ஆய்வின்படி, தமிழ்நாடு முதல் இடத்தினைப் பெற்று, வளர்ச்சிப் பாதையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற் துறை உற்பத்தியிலும், வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் திறன் பயிற்சி பெற்றவர்கள் அதிக அளவில் தேவைப்படுகின்றனர்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விழையும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தமிழ்நாட்டில் திறன் மிகுந்த தொழிலாளர்களின் தேவையினை ஈடு செய்யவும், இத்தகைய பயிற்சி மையங்கள் அரசின் சார்பில் கூடுதலாகத் தொடங்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நடப்பாண்டில் தஞ்சாவூர் மாவட்டம்-ஒரத்தநாடு, புதுக்கோட்டை மாவட்டம்-விராலிமலை, விருதுநகர் மாவட்டம்-சாத்தூர், பெரம்பலூர் மாவட்டம்-ஆலத்தூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்-திண்டிவனம் (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய ஐந்து இடங்களில் 1,000 மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறும்வகையில், விடுதியுடன்கூடிய புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசின் இந்த நடவடிக்கைகள்மூலம் வருங்காலத்தில் தொழிற் திறன் வாய்ந்த மனித வளம் அதிகரிப்பதற்கு வழிவகை ஏற்படுவது மட்டுமல்லாமல், தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

3. வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம்மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுதல், பழுதுபார்த்தல், மதுரையில் குடிசைப் பகுதி மக்களுக்கு வீடுகள் கட்டுதல், சென்னையில் மத்திய சதுக்கம் மற்றும் சரக்குந்து வாகன நிறுத்துமிடம் அமைத்தல், சூரிய மின் சக்தி அமைப்புகள் நிறுவ விதித் திருத்தம் மற்றும் ஐந்து தொழிற்பயிற்சி மையங்கள் தொடங்குதல் — முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு.க. ஸ்டாலின், பிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்திலே திராவிட ஆட்சியைத் தொடங்கி வைத்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாள். அண்ணா அவர்கள் 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று சொன்னார்கள். அண்ணாவின்*